**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>OS.No.132/2023</u>**

தேதி: 04.11.2025
பெயர் : **சக்தி (வா.சா.1)** க/பெ: மணி

**<u>குறுக்குவிசாரணை</u>**

**1.** நான் 12 ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பும் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு முன்பும் அதிலுள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரை சங்கதிகள் படித்து பார்த்து தெரிந்துகொண்டேன். எதிருரை சங்கதிகளை மறுத்து பதில் வழக்குரை(Reply Statement) தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2 முக்கால் ஏக்கர் ஆகும். வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் காட்டியுள்ளேன் என்றால் சர்வே எண்.227/6 சொத்தை மட்டும் காட்டியுள்ளேன். எனக்கு மட்டும் மேற்படி சொத்து 12 செண்ட் பாத்தியம் ஆகும். வா.சா.ஆ.4 ஆவணத்தை காட்டி கேட்டதற்கு அந்த ஆவணம் என் பெற்றோர் எனக்கு எழுதிவைத்த கிரய ஆவணம் என்று ஒப்புக்கொண்டார்.

**2.** மேற்படி பத்திரத்தை எழுதிவைக்கும்போது நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். மேற்படி சொத்தை எனக்கு தானபத்திரம் எழுதுவதற்கு முன்பு யார் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் என் அம்மா அப்பா பெயரில் இருந்தது. வேறு யாரு பெயரிலும் இல்லை. வா.சா.ஆ.5 யார் யார் பெயரில் உள்ளது என்றால் மங்களேஸ்வரி, பெருமாள், பெரியண்ணன் மகன் ரெங்கராஜ், பிச்சமுத்து முத்திரியன் மகன் பெருமாள், கிருஷ்ணன் மகன் சீரங்கன், பெரியண்ணன் மனைவி பூவாயி ஆகியோர்கள் பெயர்களில் உள்ளது. கூட்டுப்பட்டா விபரத்தை வா.சா.ஆ.4 தானபத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கூட்டுப்பட்டா சொத்துக்களை தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதுபோல் காட்ட வேண்டும் என்பதற்காக மோசடியாக தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார்கள் என்றால் எங்களுக்கு தனிப்பட்ட முறையில் பட்டா இருந்தது.

**3.** அந்த தனிப்பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். கூட்டுப்பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்கள் எனக்கு தனிப்பட்டமுறையில் கூட்டுரிமையாளர்களின் அனுமதியில்லாமல் தானசெட்டில்மெண்ட் எழுதிவைக்க என் பெற்றோருக்கு உரிமையில்லை என்றால் தனித்தனி கேணி, சர்வீஸ் மோட்டார் உள்ளது. கேணி, சர்வீஸ், விவசாயநிலம் ஆகிவற்றிற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். என் அப்பா, அம்மா சர்வே எண்.227/6 நிலத்தை கிரயத்திற்கு வாங்கிய தேதி முதல் எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைக்கும் தேதி வரை அவர்கள் பெயரில் எந்த தனிப்பட்டாவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் பெற்றோர் கிரயம் பெற்ற தேதியிலிருந்து தனிப்பட்டமுறையில் சொத்தினை அனுபவம் செய்து வந்திருந்தால் அவர்களுக்கு தனிப்பட்டா கிடைத்திருக்கும் எனவும், கூட்டுப்பட்டாவாக இருந்திருக்காது என்றால் 1943ல் பாகப்பிரிவினை ஏற்பட்டு அதில் ஒரு பாகத்தை அவர்கள் விற்றுவிட்டார்கள்.

**4.** எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதும்போது தாவா சொத்தில் 13 தென்னைமரங்கள், 15 வாழை மரங்கள், 3 வேம்பு மரங்கள், 3 மலைவேம்பு மரங்கள், 2 முருங்கை மரங்கள், 1 கருவேப்பிலை மரம் இருந்ததா என்றால் இருந்தது. என்னுடைய தானபத்திரத்தில் 13 தென்னை மரம் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மற்ற மரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் மேற்படி மரங்கள் தனிப்பட்டமுறையில் எங்கள் அனுபவத்தில் இருந்திருந்தால் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் மேற்படி மரங்கள் குறித்து தெரிவித்திருப்போம் எனவும், இல்லாததால்தான் குறிப்பிடப்படவில்லை என்றும், வழக்கு சங்கதிகளுக்கும், தானபத்திரத்திற்கும் முரண்பாடான சங்கதிகள் உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.227/6 சொத்தினை உட்பிரிவுசெய்யும்போது வருவாய்துறையினர் எங்களுக்கும் கூட்டு உரிமையாளர்களுக்கும் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் அனுப்பினார்கள். அவர்களும் கையெழுத்து செய்தார்கள்.

**5.** எந்த தேதியில் நிலத்தை அளக்க போகிறோம் என்று அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் 2022ம் வருடம் 1ம் தேதி மாதம் ஞாபகமில்லை. அந்த அறிவிப்பை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளோம். அறிவிப்பு அனுப்பியதாக நான் சொல்வது பொய் எனவும், நிலத்தை உட்பிரிவு செய்யும்போது அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. அறிவிப்பு

அனுப்பப்பட்டதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பு அனுப்பப்பட்டிருந்தால் அதை இந்த வழக்கு ஆவணமாக தாக்கல் செய்திருப்பேன் என்றால் தாக்கல செய்யவில்லை. சர்வே எண்.227/6 பி உட்பிரிவு ரத்து செய்யப்பட்டு தற்போது சர்வே எண்.227/6 என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.227/6 ஏ, 227/6 பி உட்பிரிவு ஏன் ரத்து செய்யப்பட்டது என்றால் என் பெயரில் உள்ள தனிப்பட்டாவை என்னிடம் எதுவும் கேட்காமல் கையெழுத்து பெறாமல் கூட்டுப்பட்டாவாக மாற்றிவிட்டார்கள்.

**6.** சர்வே எண்.227/6 ஏ-ல் உள்ள உட்பிரிவு தவறாக உட்பிரிவு செய்யப்பட்டது என 1 ம் பிரதிவாதி மனு கொடுத்ததின் அடிப்படையில்தான் முறையாக விசாரணை செய்து உட்பிரிவுகள் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உட்பிரிவு ரத்து சய்யப்பட்டது தவறானது என ஏதும் மனு கொடுத்து நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் O.S.No.263/2022 வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கிலும், இந்த வழக்கிலும் அரசு தரப்பினரை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண். உட்பிரிவு செய்யப்பட்டது தவறு என்பது உண்மையாக இருந்திருந்தால் அரசு தரப்பினர்களை வழக்கில் சேர்த்து பரிகாரம் கேட்டிருப்பேன் என்றால் அவர்களை சேர்த்துள்ளேன். என்னுடைய வழக்குரையில் என் தகப்பனார் ஏதேனும் ஒரு சொத்தை எனக்கு எழுதிவைக்க வேண்டுமென தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.227/6 ல் எவ்வளவு காலமாக பிரச்சினை உள்ளது என்றால் தற்போது 2 ஆண்டுகாலமாக பிரச்சினையில் உள்ளது. அதன் முன்பு பிரச்சினை இல்லை. அவர்களுடைய பாதையில் அவர்கள் சென்று வந்தார்கள்.

**7.** என்னுடைய பெற்றோருக்கு ஒக்கரை கிராமத்தில் 2 ¾ ஏக்கர் நிலம் உள்ளது. அந்த சொத்தில் 12 செண்ட் நிலம் மட்டும் எனக்கு எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் கூட்டுரிமையாளர்களுக்கு உள்ள உரிமையை மறுத்து வில்லங்கம் செய்ய வேண்டுமென்பதற்காக எனக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் மரம் வைத்து வளர்த்தேன். அதனால் அந்த இடத்தை எனக்கு எழுதிகொடுத்தார். பிரதிவாதிகள் அவர்களுக்குரிய பாதையில் சென்று வருகிறார்கள்

என்பதற்கு பாதையை குறிப்பிட்டு பத்திரம் உள்ளதா என்றால் எங்கள் பத்திரத்தில் இல்லை. அவர்கள் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தை நான் படித்துபார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் பத்திரத்தை படித்துபார்க்காமல் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். என் தம்பி படித்து பார்த்தார். நான் யூகத்தின் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு பாதைபாத்தியம் அவர்கள் பத்திரத்தில் உள்ளது என சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல.

**8.** பிரதிவாதிகள் வாரம் வாரம் அடியாட்களுடன் வந்து சண்டை போட்டதாக தெரிவித்துள்ளேன். எத்தனை முறை காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் ஒருமுறை கொடுத்தேன். அந்த புகார் மனு சம்மந்தமான மனு ஆவணங்களை என் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தை என் தரப்பில் எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. அந்த புகார் மனு சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால், நாங்கள் கொடுத்த வழக்கை போலிசார் எடுத்துக்கொள்ளவில்லை. உப்பிலியபுரம் போலிசார் நாங்கள் கொடுத்த புகாரை எடுத்துக்கொள்ளவில்லையென அவர்கள் மேலதிகாரிகளுக்கு புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

**9.** பீஸ்கேரியர் பிடுங்கப்பட்ட நிலையில் எடுக்கப்பட்ட போட்டோவை என்னுடைய சகோதரரிடமிருந்து சான்று பெற்று சாட்சிய சட்டத்தின் கீழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய சட்டத்தின் பிரிவு 65(b) படி எந்த சான்றும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் சகோதரர் முன் பாத்தியஸ்தரிடம் தகவல் சொல்லிவிட்டு வந்து பார்க்கையில் என் அம்மாவும், என் கணவரும் அடிபட்டு கிடந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ள முன்பாத்தியஸ்தர்களின் பெயர் என்னவென்றால் சாம்பசிவரெட்டியார் அவர்களின் மகன் ஆவார். அவர்கள் பெயர் தெரியாது. சாம்பசிவரெட்டியாரின் மகன் எங்கு குடியிருக்கிறார் என்றால் துறையூரில் குடியிருக்கிறார். துறையூரில் வந்து என் தம்பி சாம்பசிவரெட்டியாரின்

மகனை பார்த்துவிட்ட பிறகுதான் என் அம்மாவும், என் கணவரும் அடிபட்ட விபரத்தை கூறினார் என்றால் சரிதான்.

**10.** என் அம்மா மற்றும் என் கணவரின் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாக கூறியுள்ளேன், காயசான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். காயசான்றிதழ் தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் காயம் ஏற்பட்டிருந்தால் காவல்துறையில் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் எனவும், காயம் ஏற்படாததால்தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 12.11.2022 ம் தேதி எனக்கு பாத்தியப்பட்ட கருணைக்கிழங்கு காட்டில் டிராக்டரை விட்டு ஓட்டிச்சென்றதாக கூறியுள்ளேன். அந்த சொத்தின் சர்வே எண்.என்னவென்றால் 227/6 பி ஆகும். சர்வே எண்.227/6 பி-ல் தான் கருணைக்கிழங்கு வைத்திருந்தேன். பிரதிவாதியின் சட்டத்திற்கு புறம்பான முயற்சியை பெரியமணிதர்கள் துணையோடு தடுத்துவிட்டேன் என கூறியுள்ளேன். அந்த பெரியமனிதர்கள் யார் என்றால் எனக்கு தெரியவில்லை.

**11.** சர்வே எண்.227/6 பி-ல் தென்னை மரங்கள் மற்றும் மற்ற மரங்கள், கிழங்கு ஆகியவற்றை சாகுபடி செய்ததை காட்ட வருவாய் அலுவலர்களிடம் அடங்கள் கணக்கு வாங்கி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையாகவே நான் மேற்படி பயிர்களை சாகுபடி செய்திருந்தால் அதற்கு அடங்கள் கணக்கு பெற்று தாக்கல் செய்திருப்பேன் எனவும், சாகுபடி செய்யாததால்தான் அடங்கள் கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து புலவரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.227/6 ல் உள்ள கிணற்றில் கிழபுறம், தென்புறம், வடபுறம் ஆகிய காலிநிலங்கள் வழியாக கூட்டுப்பட்டாதாரர்கள் அவர்களுடைய நிலங்களுக்கு செல்லமுடியும் என்றால் தென்புறம் மட்டும்தான் அவர்களுக்கு பாதை உண்டு. தென்புறம் மட்டும்தான் பாதையென எந்த ஆவணத்தின் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் எங்கள் ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன்.

**12.** தென்புறம்தான் பாதையென புலவரைபடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். புலவரைபடத்தை பார்த்து எவ்வளவு நாள் இருக்கும் என்றால் 6 மாதங்கள் இருக்கும். அந்த பாதையின் உட்பிரிவு எண் என்ன என்றால் ஞாபகமில்லை. நான் புலவரைபடத்தை இந்த வழக்கில் தாக்ல்ல செய்யவில்லை எனவும், தாக்கல் செய்ததாக வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தற்போது சர்வே எண்.227/6ஏ, 227/6பி யார் யார் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 227/6ஏ பெருமாள் மற்றும் மங்களேஸ்வரி பெயரிலும், 227/6பி என் பெயரிலும் உள்ளது. மேற்படி ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். என் சொந்த ஊருக்கும், திருமணம் ஆகி சென்ற ஊருக்கும் எவ்வளவு கி.மீட்டர் இருக்குமென்றால் 26 கி.மீட்டர் இருக்கும்.

**13.** என்னுடைய சொத்துக்களை யார் பார்த்துக்கொள்வார்கள் என்றால் என் சகோதரர், என் அம்மா, அப்பா ஆகியோர்கள் பார்த்துக்கொள்வார்கள், நானும் வந்து பார்த்துகொள்வேன். சர்வே எண்.227/6பி எனக்கும் மட்டும் பாத்தியமென விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் ஆமாம். விளம்புகை பரிகாரம் இந்த வழக்கில் கேட்கவில்லை என்றால் சரியல்ல. கிணற்றுக்கு தெற்கே உள்ள பகுதி சீரங்கன், பிச்சமுத்து பாத்தியப்பட்டது. அது 6 செண்ட் ஆகும். கிணற்றுக்கு கிழக்கே உள்ள பகுதி சும்மாதான் உள்ளது. அது 2 செண்ட் இருக்கும். கிணற்றுக்கு மேற்கே பூவாயிக்கு பாத்தியப்பட்ட நிலமாகும். பூவாயிக்கு பாத்தியப்பட்ட கிணற்றுபகுதி நிலத்துக்கு மேற்குபுரத்தில்தான் பூவாயி அவர்களின் விவசாய நிலம் உள்ளது. சீரங்கன், பிச்சமுத்து அனுமதி கொடுத்தால்தான் பூவாயி அவருக்கு பாத்தியப்பட்ட மேற்குபுற நிலத்திற்கு செல்லமுடியும் என்றால் சரியல்ல. பூவாயிக்கு தனிப்பட்ட முறையில் பாதை உள்ளது.அவர் அனுமதி கேட்க அவசியமில்லை.

**14.** கிணற்றை சுற்றியுள்ள காலிநிலங்கள் மூலமாகதான் கூட்டுபங்குதாரர்கள் அனைவரும் அவர்கள் நிலத்தில் சென்று விவசாயம் செய்ய முடியும் என்றால் பத்திரப்படி அவர்கள் செல்ல வேண்டும். தென்புறம்தான் செல்லவேண்டும். நான் இந்த வழக்கில் அல்லது உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் வழக்கு சொத்தை பார்வையிட ஆணையர் வேண்டி மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் இரண்டு வழக்கிலும் நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆணையர் வேண்டி

மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டு ஆணையர் நியமிக்கப்பட்டு அறிக்கை தாக்கல் செய்தால் உண்மைநிலவரங்கள் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால்தான் நான் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிணற்றுக்கு அருகிலுள்ள கூட்டுபங்குதாரர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாகமாக பிரித்து அனுபவம் செய்ய இயலாது எனவும், பொதுவாகதான் அனுபவம் செய்ய முடியும் என்றால் சரியல்ல.

**15.** கிணற்றை சுத்தியுள்ள 4 புறத்திலும் உள்ள நபர்கள் நாளது வரை வண்டி வாகனங்கள் ஓட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் வண்டி வாகனம் ஓட்டி செல்வதை நான்தான் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மரங்கள் வெட்டிவிட்டார்கள் என்பதற்காக எந்த தேதியில் VAO, Tahsildar, சந்தித்தேன் என்றால் 28.09.2022ம் தேதி மரம் வெட்டிய மறு நாள் சென்று பார்த்தேன். அவர்களிம் எழுத்துமூலமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. தாசில்தாரை பார்த்து எத்தனை நாட்கள் கழித்து மரம் அறுத்த இடத்தை காட்டினேன் என்றால் 6 மாதம் கழித்து காட்டினேன். வா.சா.ஆ.18 சான்று வழங்கிய சந்திரசேகருக்கு மர சம்மந்தமான நிபுனர், மர தொழில் செய்பவர். ஒக்கரையில் மரம் தொழில் செய்பவர்கள் 5, 6 பேர்கள் இருப்பார்களா என்றால் எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் செங்கல் சூலை அதிகமாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

**16.** 2022ல் ஒரு வாழைத்தார் பெரியது ரூ.400/-க்கு விற்கும். தென்னை மரங்கள் காய்க்கும் மரங்கள் ஆகும். தென்னை மரங்களின் எடை அனுமானத்தின் அடிப்படையில் அவர் குறிப்பிட்டுள்ளார். சான்று வழங்குவதற்கு தனிப்பட்ட முறையில் உரிமம் வாங்கியுள்ளாரா என்றால் என் கணவருக்குத்தான் தெரியும். சந்திரசேகரை எனக்கு நேரடியாக தெரியாது, கணவர் மூலமாகதான் தெரியும். அவரை என் கணவர்தான் அழைத்துச் சென்று காட்டினார். சந்திரசேகர் என்ன படித்துள்ளார் என்று என் கணவருக்குத்தான் தெரியும். வா.சா.ஆ.18 சான்றிதழை தாக்கல் செய்வதற்கு முன்பு நான் படித்து பார்த்துள்ளேன். அந்த சான்றில் சந்திரசேகர் எத்தனாம் வகுப்புவரை படித்துள்ளார் என குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சந்திரசேகர் அந்த சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என எப்படி தெரிந்துகொண்டார் என்றால் நாங்கள் பட்டாவை காட்டினோம். வா.சா.ஆ.18 எங்கு எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது.

**17.** சந்திரசேகருக்கு வா.சா.ஆ.18 சான்று வழங்க எந்த தகுதியும் இல்லையெனவும், நாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த ஆவணம் அவர் தயார் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பட்டா உட்பிரிவு செய்து ரத்துசெய்தது செல்லாது என நாங்கள் மனு கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். நாங்கள் மனு கொடுத்தபிறகும் பட்டா உட்பிரிவு செய்ததில் கூட்டுபட்டாதாரர்கள் பெயர் உள்ளதை அவர்கள் ரத்து செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.227/6ஏ, மற்றும் 6பியில் தற்போது வரை 227/6ல் இருந்த கூட்டுபட்டாதாரர்களின் பெயர் உள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு நடடிவக்கை எடுக்கவில்லை என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மனுவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிபார்த்து என் பெயரில் பட்டா வழங்க உத்தரவிடப்பட்டது. அந்த உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

**18.** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் என் பெயரில் பட்டா வழங்க உத்தரவிட்டதாக நான் சொல்வது தவறு எனவும், உத்தரவு சங்கதிகளுக்கு விரோதமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் அறிவிப்பு அனுப்பி இறுதி உத்தரவை வருவாய்துறையினர் பிறப்பித்துள்ளார்கள் என்றால் இல்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அறிவிப்பு அனுப்பி விசாரணை செய்யப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டது தவறு எனவும், முசிறி கோட்டாட்சியர் தகுந்த உத்தரவு பிறப்பிப்பார் என வட்டாட்சியர் முடிவு செய்துள்ளார் என்றும், அந்த முடிவு இருதரப்பினருக்கும் எழுத்துமூலமாக பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்பட்டது என்றால் இல்லை. எனக்கு வரவில்லை. உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**19.** தாவா சொத்து கூட்டுச்சொத்து எனவும், அதிலுள்ள நிலங்களுக்குசெல்ல அவர்களுக்கு உரிமையுள்ளது எனவும், செடிகளை வெட்டி அகற்றுவதற்கும் அவர்களுக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல.நான் சொல்வதுபோல் விலை உயர்வுள்ள மரங்களை பிரதிவாதிகள் வெட்டிவிட்டார்கள் என்று கூறுவது வழக்கிற்காக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு

கூட்டுரிமையாளருக்கு எதிராக இன்னொரு கூட்டுரிமையாளர் நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள போட்டோ, வீடியோ, ஆகியவற்றின் நகல்களை பிரதிவாதிகளுக்கு கொடுக்காததால் அதிலுள்ள சங்கதிகள் பிரதிவாதிகளுக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள போட்டோ, வீடியோ ஆகியவற்றிற்கு யார் மூலமாக எடுக்கப்பட்டது என்பதற்கான சாட்சிய சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி சான்றிதழ் தாக்கல் செய்யாததால் அந்த ஆவணம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

**20.** மரங்கள்வெட்டி 6 மாதங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணம் என்னால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் பெற்றோர் எனக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் மோசடியானது எனவும், அந்த ஆவணம் மூலம் எந்த உரிமையும் எனக்கு கிடைக்காது என்றால் சரியல்ல. தாவா சொத்து என் பெற்றோருக்கு எழுதிகொடுத்த கிரய முன் பாத்திஸ்தர்கள் ஆவணங்களின் அடிப்படையில் எந்தவிதமான உரிமையும், அமலாக்கம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

(ஒம்)/-C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.